

கள்ளக்குறிச்சி ஏமப்பேர் புறவழி சாலை ரவுண்டானா அருகில் புதிய புறநகர் பேருந்து நிலையம் ரூ.46.30 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது, இவ்விழாவில் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள், மேலும் இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், ஆ.ஜெ.மணிக்கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

# மாதவரம் தொகுதிக்குட்பட்ட பகுதி - ஒன்றிய - பேரூர் கழக (BDA) பயிற்சிக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் தொகுதிக்குட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழக (BDA) பயிற்சிக் கூட்டம் இன்று (29.06.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.00 மணிக்கு, மாதவரம், எம்.ஆர்.பேலஸ் திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. எனது தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாதவரம் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதள பொறுப்பாளர் கே.சுரேந்தர் பயிற்சி அளிக்க உள்ளார்.

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாதவரம் தொகுதி பார்வையாளர் கே.அருண், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் (BDA) நிர்வாகிகளை அழைத்து வந்து தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

## இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் தலைமை!

# இராயபுரம் கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் (பிஎல்ஏ2) (பிடிஏ) ஆலோசனைக்கூட்டம்!

### ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி – ஐட்ரீம் இரா.மூர்த்தி – டாக்டர் அ.சுபேர்கான் பங்கேற்பு !

சென்னை, ஜூன் 29-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு மேற்கு பகுதி சார்பில் (பிஎல்ஏ2) (பிஎல்ஏ) ஆலோசனைக்கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் எம்.கே.எஸ்.மஹால் சிமென்ட்ரி ரோடு சாலை, இராயபுரத்தில் நடைபெறுகிறது.

இதில் இராயபுரம் பகுதிச் செயலாளர்கள் இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

சென்னை மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இராயபுரம் தொகுதி பார்வையாளர் டாக்டர்.அ.சுபேர்கான், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

தா.இளைய அருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், மு.கோபி, க.நாகம்மை, கி.ராஜேந்திரன், வே. சிவக்குமார், ந.சண்முகம், த.ஜெயபால், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், க.கலைச்செல்வன், காட்டன் ஜி.சதிஷ்குமார், ஆர்.வி.கணேஷ், என்.கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், எம்.என்.வெங்கட், கே.லட்சுமணன், ஐசிஎப்.பழனிவேல், என்.பாரி, எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு. திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், இரா.பொன்முடி, ந.குமார், எஸ்.யுவராஜ், ஏ.அன்வர், எம்.பாலாஜி, பிரியாணி பாலா, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.எம்.மொய்தீன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர், கு.ரமேஷ், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட எட்டு வட்டங்களின்

# பாக நிலை முகவர்கள் (BLA2) - பாக தொழில் நுட்ப முகவர்கள் (BDA) பயிற்சிக் கூட்டம்!

### பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூன் 29-

மதுரவாயில் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி இணைந்து ஓரணியில் தமிழ் நாடு என்கின்ற செயலி (APP) விளக்கி காணொலி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக தொழில் நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் பயிற்சிக் கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் ஆற்காடு சாலை, போரூர் கிருஷ்ண வேணி திருமண மண்டபத்தில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். அருணாசலம், தலைமை பொதுக் குழு உறுப்பினர் வ. செல்வகுமார், எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ். பாரதி, எம்.சி., கே.ராஜீ, எம்.சி., தொகுதி மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து, மதுரவாயல் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் லயன் த.பாலாஜி, ஆர்.கருணாகரன், எஸ்.ஷகிலா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

ஆகவே, இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தெற்குப் பகுதிக் குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2), பாக தொழில் நுட்ப முகவர்கள் (BDA), வட்ட கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார்! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் முன்னிலை! ச.தமிழ்செல்வன் தலைமை!

# 42(அ) வட்ட பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### கலாநிதி வீராசாமி, கே.வி.லோகேஷ், என்.மருதுகணேஷ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 29-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்ட பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் வாணி மஹாலில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் ச. தமிழ்ச்செல்வன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.கே. நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் வட்ட கழக நிர்வாகிகள் கே.தேவதாஸ், கே.சங்கர், த.குமரேசன் ச.குமரன், வி.எஸ்.டி. பாலாஜி, வி.செல்வமணி ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகிறார்.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பார்வையாளர் கே.வி.லோகேஷ், கழக சட்டத் துறை துணை செயலாளர் என்.மருதுகணேஷ், இர. பொன்இளவரசன், பகுதி நிர்வாகிகள் என். அனிபா, ஆர். டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

எனவே வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், அனைத்து பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.




சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சியில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் 102வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச. அற்புதராஜ் முன்னிலையில் மு.ரமேஷ் தமிழ்செல்வி ரமேஷ், வரவேற்பில் சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் .சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் பேராசிரியர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ் சாதிக் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். உடன் செல்வமணி, அண்ணாதுரை ,ஆர் முருகன், பாஸ்கர் ,ஜே முருகன், வே.பாரதி மாமணி , கருணாநிதி டில்லி பாபு, கல்வி நாதன், குணசேகரன் மனோகரன், ஜனார்த்தனன், தினேஷ், வி என் வெங்கடேசன் ,சதீஷ் ராமச்சந்திரன் பிரேமலதா சாக்ரடீஸ் கமலக்கண்ணன் கபிலன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. “ஓரணியில் தமிழ்நாடு” ஆன்லைன் உறுப்பினர் சேர்க்கைகான பயிற்சி பாசறை கூட்டம்!

### மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!



தமிழ்நாடு முதல்வர், கழக தலைவரின் ஆணையின்படி, தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சி பொறுப்பேற்கும் வகையில் “ஓரணியில் தமிழ்நாடு” ஆன்லைன் உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா, சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஆலோசனைபடி மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் எனது தலைமையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக ஏற்பாட்டில் பொன்னேரி மற்றும் கும்முடிப்பூண்டி தொகுதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதள முகவர்கள் (BDA) மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

| தேதி | நேரம் | இடம் | ஒன்றிய, நகர, பேரூர் | ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் |
|---|---|---|---|---|
| 29.06.2025 | காலை 10.00மணி | AAM மஹால் திருவெங்கடாபுரம், தடப்பெரும்பாக்கம், பொன்னேரி. | சோழவரம் வடக்கு | நா.செல்வசேகரன் |
| | | | சோழவரம் மேற்கு | வெ.ஆனந்தகுமார் |
| | | | மீஞ்சூர் வடக்கு | மு.முரளிதரன் |
| | | | பொன்னேரி நகரம் | ஜி.ரவிக்குமார் |
| | | | ஆரணி பேரூர் | பி.முத்து |
| | மாலை 3.00மணி | பாலகோட்டி திருமண மண்டபம் மீஞ்சூர் | மீஞ்சூர் கிழக்கு | A.R.D.உதய சூரியன் |
| | | | மீஞ்சூர் மேற்கு | ஆ. ராஜா |
| | | | மீஞ்சூர் தெற்கு | கா.சு.ஜெகதீசன் |
| | | | மீஞ்சூர் பேரூர் | க.சு.தமிழ் உதயன் |
| 30.06.2025 | காலை 10.00மணி | வைஜெயந்தி மஹால் ஆத்துப்பாக்கம், எல்லாபுரம் | எல்லாபுரம் வடக்கு | P.J.மூர்த்தி |
| | | | எல்லாபுரம் தெற்கு | ஆ.சத்தியவேலு |
| | | | பூண்டி கிழக்கு | D.K.சந்திரசேகர் |
| | | | பூண்டி வடக்கு | எம்.ஜான்(எ) பொன்னுசாமி |
| | | | ஊத்துக்கோட்டை பேரூர் | அபிராமி குமரவேல் |
| | மாலை 3.00மணி | J.F.N.திருமண மஹால் பெத்திகுப்பம், கும்முடிப்பூண்டி | கும்முடிப்பூண்டி மேற்கு | மு.மணிபாலன் |
| | | | கும்முடிப்பூண்டி கிழக்கு | ந.பரிமளம் |
| | | | கும்முடிப்பூண்டி தெற்கு | கி.வே.ஆனந்தகுமார் |
| | | | கும்முடிப்பூண்டி பேரூர் | இரா.அறிவழகன் |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள்-டி.ஜெ.கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., இ.ஏ.பி.சிவாஜி, பி.ஜெ.மூர்த்தி, தொகுதி பார்வையாளர்கள்- தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாவட்ட நிர்வாகிகள் - மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், மாநில அணிகளின் நிர்வாகிகள்- சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், கலந்து கொள்கிறார்கள்.

**வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்**
பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## இரா.லட்சுமணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் (பிஎல்ஏ2) மற்றும் (பிடிஏ) ஆலோசனைக்கூட்டம்!

### ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி - கே.வி.லோகேஷ் பங்கேற்பு! இரா.லட்சுமணன் அறிக்கை!

சென்னை, ஜூன் 29-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் (பிஎல்ஏ2) மற்றும் (பிடிஏ) ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் ஒரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பாக முகவர்கள் மற்றும் இணைய வழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் ஆலோசனைக்கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் வாணி மகாலில் டி.எச். ரோடு சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகம் எதிரில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் தலைமை வகிக்கிறார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்லிலை வகிக்கிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் பங்கேற்பில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மற்றும் பாக முகவர்கள்(பிஎல்ஏ2)பாக சமூக வலைத்தள முகவர்கள்(பிடிஏ) மற்றும் தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிசெயலாளர் இரா.லட்சுமணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## ப.குமார் தலைமை! இரா.லட்சுமணன் முன்னிலை!

# 42வது வட்டத்தில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - ஜே.ஜே.எபினேசர் - கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 29-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42வது வட்ட திமுக சார்பில் (பிஎல்ஏ2) மற்றும் (பிஎல்சி) ஆலோசனைக்கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் வாணி மஹால், தண்டையார்பேட்டையில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் ப.குமார் தலைமை வகிக்கிறார்.பகுதிச்செயலாளர் இரா. லட்சுமணன் முன்னிலை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆர்.ஜி.பாபு, ஏ.மைக்கேல், ஆர்.கவிதா, ஆ.மணி, ஏல். அன்பரசு, எல்.பிரபாகரன், ஜி.ஏ.சிவமணி, ஆர்.சம்பத், கோ.கார்த்திகேயன், ஒளி ஒலி ஆ.பாபு, மல்லாசரவணன், எஸ்.சேகர், தெ.சினிவாசன், மோ.சிவா, கே. பத்மா, கே.ராணி, கு.பன்னீர் செல்வம், எஸ்.சையத், பி. லோகநாதன், வி.ராஜா, வி. சத்தியசீலன், ஏ.சித்ரா, எஸ். ராஜத்தி, ஜெயலட்சுமி, எம். செல்வராஜ், எல்.கோகுலகிருஷ்ணன், வி.யுவராஜ், எஸ். ராஜேஸ்வரி, தேன்மொழி, எஸ்.நைனியப்பன், சி.ஜி.யுவராஜ், பன்னீர்செல்வம், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

வி.மோகன் நன்றி கூறுகிறார்.

## சென்னை தெற்கு மாவட்டம் – சைதை கிழக்குப் பகுதி

# பாக முகவர்கள் பாக தொழில்நுட்ப முகவர்கள் கூட்டம்!

### பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜூன் 29 -

சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி இணைந்து ஓரணியில் தமிழ் நாடு என்கிற செயலி (APP) விளக்கம் காணொளி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக தொழில் நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று பகல் 11.00 மணிக்கு கிண்டி, நரசிங்கபுரம், சக்கரபாணி சாலையில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைத்து சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் எம் .சி. தலைமையில் நடைபெறுகிறது

கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்களும் தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்

மேலும் கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியினரால் நமது பகுதியில் உள்ள பாக தொழில்நுட்ப முகவர்களுக்கு எல்.இ.டி. திரை மூலம் சமூக வளைத்தளப் பயிற்சி அளிக்கப் படுகிறது எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி பாகநிலை முகவர்களும் (பி.எல்.ஏ2) வாக்குச்சாவடி பாகநிலை தொழில்நுட்ப முகவர்களும் (பி.டி.ஏ.) குறித்த நேரத்தில் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் நமது பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள் தங்கள் வட்டத்தில் உள்ள பாகநிலை முகவர்கள் மற்றும் பாக தொழில் நுட்ப முகவர்களை ஒருங்கிணைத்து நூறு சதவீதம் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் .

இவ்வாறு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மயிலை த. வேலு - ஜெ. கருணாநிதி - கே. ஏழுமலை - மு.மணிவண்ணன் - ரத்னாலோகேஸ்வரன் - கோமதி மணிவண்ணன் பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 131வது வட்ட பாகப் பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன் 29-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை.த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோளை ஏற்று, தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131-வது வட்ட கழக பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில் 30.06.2025 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி 4வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர்நகர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் மு. மணிவண்ணன், தொகுதி பார்வையாளர் ரத்னாலோகேஷ்வரன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், வட்ட அவைத்தலைவர் வி.டி.செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான வேலைப்பாடுகள் குறித்து ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் வட்ட கழகத்தை சார்ந்த மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், (B.L.A - 2), (B.L.C) (B.D.A ) உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் மு.ம.செந்தில் குமார் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.